DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,
DEVAKOTTAI

Calender
Miscellaneous **CC. NO.54/2022**
Preliminary Register
Sessions

Deposition of witness for Prosecution அ.சா.1
Defence
Court

Name : நிர்மலா
Father/ Husband Name : ராமச்சந்திரன்
Village :
Taluk :
Caste :
Calling :
Religion :

Age :

எதிரி ஆஜர் இல்லை. குவிமுச பிரிவு 317ன் படி மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

Solemnly affirmes to condition with the provisions of Law Act 1873 day of 12.06.2025.

**முதல்விசாரணை:-** சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

1. நான் தேவகோட்டையில் குடியிருக்கிறேன். வீட்டில் குடித்தனம் இருக்கிறேன். எதிரியை தெரியும். கடந்த 07.12.2020-ம் தேதி நான் வளர்க்கும் கிளிக்கு இரை போடுவதற்காக வெளியே போனேன். எதிரி இருதய ரஜினி மற்றும் ஆரோக்கிய ரெக்ஸி ஆகியோர் என்னை தேவிடியா முண்டை, அவ்சாரி முண்டை என திட்டினார்கள். யாரை திட்டினீர்கள் என்று நான் கேட்டதற்கு, இருவருமே உன்னை தான் திட்டுகிறோம் என்று சொல்லி கீழே கிடந்த சிலாப் கல்லை எடுத்து என் மேல் வீசினார்கள். அதில் எனக்கு இடது கை விரல், முதுகு ஆகிய இடங்களில் காயம் பட்டது. நான் கத்திய போது இருதய ரஜினி முடியைப் பிடித்து இழுத்து வாசலுக்கு கொண்டு வந்து சாக்கடையில் தள்ளினார்கள்.

2. பின்னர் ஆரோக்கிய ரெக்ஸி காலில் கிடந்த செருப்பை எடுத்து என்னை அடித்தார். நான் கத்தினேன். பக்கத்து வீட்டில் வசிக்கும் இராஜேஸ்வரி மற்றும் அமுதவள்ளி ஆகியோர் வந்து

அவர்கள் இருவரையும் தடுத்தார்கள். அப்போது எதிரிகள் இன்று ஆள் வந்ததால் தப்பித்து விட்டாய் உன்னை கொல்லாமல் விடமாட்டேன் என்று சொன்னார்கள். என்னை இராஜேஸ்வரி தேவகோட்டை அரசு மருத்துவமணைக்கு சிகிச்சைக்கு சேர்த்தார். நான் மருத்துவமணையில் இருக்கும் போது போலீசார் என்னிடம் புகார் பெற்றுக் கொண்டார்கள். என்னிடம் காண்பிக்கப்படும் புகார் நான் கொடுத்தது தான். புகார் மனுவில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். **(மேற்படி புகார் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

1. நான் குடியிருப்பது என் சொந்த வீடு. எதிரி வாடகை வீட்டில் குடியிருந்து வருகிறார். வாடகைக்கு இருக்கும் வீடு யாருக்கும் சொந்தமானது என்றால் தெரியாது. என் வீட்டில் இருந்து கால்வாய் எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் சுமார் 10 அடி இருக்கும். சம்பவத்திற்கு முன்பு எதிரிக்கும் எனக்கும் ஏதேனும் பிரச்சினை உள்ளதா என்றால் ஆமாம். நானும், எதிரியும் அதனால் பேசிக்கொள்வதில்லை என்றால் சரிதான்.

2. சம்பவத்தின் போது எதிரிகள் அவர்களாக பேசிக் கொண்டிருந்த போது நான் தான் சென்று யாரை பேசிக்கொண்டிருக்கிறீர்கள் என்று கேட்டேனா என்றால் அவர்கள் என்னைப் பார்த்து தான் பேசினார்கள், அதனால் தான் போய் கேட்டேன். எதிரி வாடகைக்கு இருக்கும் வீட்டை அதன் உரிமையாளர் காலி செய்யச் சொல்லி கேட்டு வருவததால் எனக்கும் எதிரிக்கும் இடையே பிரச்சினை ஏற்பட்டது என்றால் சரியல்ல, அந்த வீட்டின் உரிமையாளர் யார் என்றே எனக்கு தெரியாது.

3. எதிரி குடியிருக்கும் வீட்டின் உரிமையாளர் எனது சொந்தக்காரர் என்றும் வழக்கிற்காக தெரியாது என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரியின் வீட்டின் உரிமையாளருக்கும், எதிரிக்கும் இடையே உரிமையியல் நீதிமன்றத்தில் வீட்டை காலி செய்வது தொடர்பாக நடக்கும் வழக்கு பற்றி எனக்கு தெரியாது. சம்பவம் காலை 10.00 மணிக்கு நடைப்பெற்றது. நான் மருத்துவமணைக்கு காலை 11.00 மணிக்கு சென்றடைந்தேன்.

4. புகாரை நான் தான் எழுதினேனா என்றால் இல்லை, நான் சொல்ல, சொல்ல இராஜேஸ்வரி மருத்துவமணையில் வைத்து எழுதினார். நான் எழுதும்போது போலிசார் உடன் இருந்தார்களா என்றால் இருந்தார்கள். புகாரை சிகிச்சைக்கு முன்பு எழுதினோமா, பின்பு எழுதினோமா என்றால் சிகிச்சைக்கு

முன்பு எழுதினோம். புகாரை மருத்துவமணைக்கு வெளியில் வைத்து எழுதினோமா என்றால் இல்லை, மருத்துவமணையில் அட்மிட் ஆகி பெட்டில் வைத்து எழுதினோம்.

5. நான் போலீசார் வந்த பின்பு தான் புகாரை எழுதினேனா என்றால் ஆமாம். புகாரில் உள்ள வாசகத்தை நான் சொன்னேனா, போலீசார் சொன்னார்களா என்றால் நான் தான் சொன்னேன். போலீசார் சம்வத்தின் அன்று மட்டும் தான விசாரித்தார்களா என்றால் காலையில் மருத்துவமணையில் விசாரித்துவிட்டு, மாலையில் வீட்டில் வைத்து விசாரித்தார்கள். மாலையில் வீட்டில் விசாரித்த போது நான் மருத்துவமணையில் தான் இருந்தேன், விசாரித்ததாக என்னிடம் சொன்னார்கள். நான் மூன்று நாட்களாக மருத்துவமணையில் தான் இருந்தேன். இராஜேஸ்வரி மற்றும் அமுதவள்ளி எனது பக்கத்து வீட்டுகாரர்கள் ஆவார். எதிரி வாடகைக்கு இருக்கும் வீட்டை அதன் உரிமையாளர் காலி செய்யச் சொல்லி கேட்டு வருவததால் அவரின் தூண்டுதலின் பெயரில் பொய்யாக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றும் நான் சொல்வது போல் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றும் சொன்னால் சரியல்ல.

**<u>மறு விசாரணை :</u>** இல்லை.

S/d.D. பூர்ணிமா.,B.A.B.L. (Hons.) LL.M.,
நீதித்துறை நடுவர்,
தேவகோட்டை.